'திக்ரில் சிறந்தது லாஇலாஹ இல்லல்லாஹ் (الله إلا إله لا(என்பதாகும். துஆவில் சிறந்தது அல்ஹம்து லில்லாஹ் (الحمد لله (என்பதாகும்

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறுவதைத் தான் கேட்டதாக ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள் : 'திக்ரில் சிறந்தது லாஇலாஹ இல்லல்லாஹ் (الله إلا إله لا(என்பதாகும். துஆவில் சிறந்தது அல்ஹம்து லில்லாஹ் (لله الحمد (என்பதாகும். [நம்பகமானது (ஹஸன்)] [இதனை இமாம்களான திர்மிதி, குப்ரா எனும் நூலில் நஸாஈ, இப்னுமாஜா ஆகியோர் பதிவு செய்துள்ளார்கள்]

இந்த ஹதீஸில் எமக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திக்ரில் மிகவும் சிறப்புக்குரியது:லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற வார்த்தை எனக் குறிப்பிடுகிறார்கள். இதன் கருத்து 'உண்மையாக வணங்கத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாறும் இல்லை என்பதாகும். மேலும் பிரார்த்தனையில் மிகவும் சிறப்புக்குரியது அல்ஹம்துலில்லாஹ் (புகழனைத்தும் அல்லாஹ்வுக்குரியது) என்பதாகவும் கூறுகிறார்கள். இதன் கருத்து: அருள்பாலிப்பவன் அல்லாஹ் மாத்திரமே என்பதை ஏற்றுக்கொள்வதும், அவனே அழகிய பரிபூரணமான வர்ணனைக்கு உரித்தானவன் என்பதுமாகும்.

http://sunnah.global/hadeeth/ta/show/3567